

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சேலம் மேற்கு மற்றும் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) தொழிலதிபரும், தமிழ் இசை சங்கத்தின் மதிப்பியல் செயலாளருமான ஏ.சி.முத்தையா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா. மதிவேந்தன் மற்றும் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வாக்குத் திருட்டு குற்றத்திற்காக

# தலைமைத் தேர்தல் ஆணையரை கைது செய்வார்களா?

## முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி!



**சென்னை, நவ.16-**

**"வாக்குத் திருட்டுக் குற்றத்திற்காக தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமாரை கைது செய்வார்களா?" என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.**

சமூக வலைதளங்களில் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் அவர்கள் அளித்த பேட்டி வைரலாகி வருகிறது. அந்த சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் பொன்ராஜ் அவர்களின் பேட்டி வருமாறு:

ஞானேஷ்குமார் என்று ஒருத்தர் இருக்கிறார். எலக்ஷன் கமிஷ்னர். படித்துதானே வந்திருக்கிறார். எலக்ஷன் கமிஷனராக உட்கார்ந்து இருக்கிறார். ஐ.ஏ.எஸ்.படிப்பை கிளியர் செய்து விட்டு தானே வந்திருக்கிறார். அவர் செய்து கொண்டிருக்கின்ற அயோக்கி யத்தனத்தை நீங்கள் பட்டியல் இட முடியுமா?

அந்த அயோக்கியத்தனத்திற்கு யாராவது பதில் சொல்றாங்களா இங்கே? படித்தவர் தானே அவர். டாக்டர் படித்து இருக்கிறார். அவன் குண்டு வெடிக்கிறான், ஓ.கே. தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறான். அவனுக்கு மதம் காரணமாக இருக்கிறது, அவனை அரஸ்ட் செய்துவிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்,

**ஞானேஷ்குமாரை எப்போது அரஸ்ட் செய்வீங்க.? ஒட்டு மொத்த இந்தியாவின் வாக்கை திருடுகிறார். அவைர எப்படிங்க அரஸ்ட் செய்வீங்க.? 65 இலட்சம் பேர்களுடைய வாக்கை திருடி இருக்கிறார். ளுஐசு ஐக் கொண்டு, தமிழ்நாட்டில் இப்போது வாக்கை திருடப் போகிறார். எப்படி அரஸ்ட் செய்வீங்க. ஐ.ஏ.எஸ்.ஆக இருக்கிறார். எலக்ஷன் கமிஷனரா இருக்கார். படித்து இருக்கிறார். பி.ஜே.பிக்கு அடிமையா இருகார்? ஒ படித்தவன் எப்படி பி.ஜே.பிக்கு அடிமையாக இருப்பார். இன்டிபெண்டன்ட் எலக்ஷன் கமிஷனில் படித்தவர், ஐ.ஏ.எஸ்.முடித்தவர், இன்றைக்கு ஒரு அடிமை சேவகம் செய்கிறார் என்றால், அவருக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?**

ஈக்குவள் செய்து பார்ப்போமா. இதனை ஈக்குவள் செய்ய தெரிந்த நாராயண திருப்பதிக்கு எலக்ஷன் கமிஷனை ஈக்குவள் செய்ய தெரியாதா?

**நெறியாளர்:** ஓட்டும் தீவிரவாதமும் ஒன்றா என்று கேட்கிறார்களே?

**பொன்ராஜ்:** ஆமாம் ஒன்றுதான். மக்களின் அடிப்படை உரிமையான ஓட்டைத் திருடி நாட்டை கைப்பற்றுவது என்பது என்னது? தீவிரவாதம் தானே! தீவிர வாதத்தைவிட கொடுமையான செயல் அது. இது எலக்ஷன் தீவிரவாதம், அரசியல் தீவிர வாதம். அந்த அரசியல் தீவிர வாதத்திற்கு இன்டிபெண்டன்டா செயல்படக் கூடிய எலக்ஷன் கமிஷனர் ஒரு அடிமையாக செயல்படுகிறார் என்றால் எப்படி அதனை ஏத்துக் கொள்வீர்கள். என்ன பதில் சொல்கிறார். சுப்ரீம் கோர்ட்டிற்கு பதில் சொல்கிறாரா? என்ற கேள்விக்காவது பதில் இருக்கிறதா? ஜனநாயக முறைப்படி எழுப்பக் கூடிய எந்தக் கேள்விக்காவது பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்!

இது தீவிரவாதத்தை விட அதி தீவிரவாதம்.

அவர் படிச்சு இருந்து என்ன பிரயோசனம். படிச்சவருக்கு அறிவு இருக்கனும், காமன்சென்ஸ் இருக்க வேண்டும். பதவிக்கு ஏற்ற வகையில் செயல்படக் கூடிய தைரியம் இருக்க வேண்டும். உனக்கு அரசியல் சாசனம் இன்டிபெண்டட் உரிமை கொடுத்து இருக்கு. அதனையும் மீறி நீங்கள் அடிமையாக இருக்கிறீர்கள் என்றால், நீ என்ன பதவிக்காக அடிமையாக இருக்கிறாயா? உன் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் ஐ.ஏ.எஸ்.ஆபிசர்ஸ். படித்தவர் அடிமையாக இருக்கிறான் என்றால் நீ படிச்சு என்ன பிரயோஷனம் ?

கேட்பேனா இல்லையா இப்போ. படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.?

குவாலிட்டி, கேரக்டர், தைரியம், வீரம், விவேகம், அரசியல் சாசன சட்ட பதவிக்கேற்ற செயல்படக் கூடிய நீதி வழுவா தன்மை. இவையெல்லாம் ஒருத்தனுக்கு இருக்கனும் என்று நினைத்தால் அவன் முது கெலும்புள்ள ஒரு மனிதனாக இருப்பான். முதுகெலும்பற்ற வெற்று பிண்டங்களை வைத்துக் கொண்டு அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் அவர்களிடம் என்ன பேசுவது?

இவ்வாறு பொன்ராஜ் அவர்கள் பேசினார்.


